பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 07 2026 WEDNESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தில்லியில் 8 கிலோமீட்டர் நீள சுரங்கப்பாதை திட்டம் உள்ளிட்ட பல நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**2.** மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், நான்கு நாள் பயணமாக இன்று பிரான்ஸ் புறப்பட்டார்.

**3.** மலேசியாவின் இந்திய தூதராக திரு **Somnath Ghosh** நியமிக்கப்பட்டுள்ளார்.

**4.** பாகிஸ்தானில் உள்ள **ISIS** தீவிரவாத அமைப்பு தொடர்புடைய குழுக்களின் மீது ஆப்கானிஸ்தான் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.

**5.** இந்தியா — இங்கிலாந்து இடையேயான முதலாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்றிரவு பத்து மணிக்கு தொடங்குகிறது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>

தில்லியில், நெல்சன் மண்டேலா **Marg** பகுதியிலிருந்து துவாரகா அதிவிரைவு தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் ஆறுவழி சுரங்கப்பாதைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், **8** புள்ளி ஒரு கிலோமீட்டர் நீளத்திற்கு **6** ஆயிரத்து **969** கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

மேற்கு தில்லியையும், தெற்கு தில்லியையும் இணைக்கும் வகையில் இந்த வழித்தடம் அமைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், **Mahipalpur**-க்கும் இடையே உயர்மட்ட சாலை அமைக்கவும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால், **7** லட்சத்து **54** ஆயிரம் வேலைநாட்கள் நேரடியாகவும், **9** லட்சத்து **80** ஆயிரம் வேலைநாட்கள் மறைமுகமாகவும் வேலைவாயப்பை உருவாக்கித் தரும் என்றும் அமைச்சர் கூறினார்.

உத்தரபிரதேசத்தில் **Kanpur - Kabrai** இடையே **117** கிலோமீட்டர் நீள **4** மற்றும் **6** வழிச்சாலை அமைக்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

7 ஆயிரத்து 145 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால், கான்பூர், Kabrai ஆகிய இடங்களுக்கு, சாஹர், போபால் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் உள்ள இடங்களுக்கு நெடுஞ்சாலை இணைப்பு கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் மூலம், ஒரு கோடியே 20 லட்சம் வேலைநாட்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் கிடைக்கும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டின் பிறப்பு — இறப்பு விகிதங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த பரிந்துரைகளை விரைந்து அளிக்குமாறு இதற்கென அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவை, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற உயர்மட்டக்குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பிறப்பு — இறப்பு விகிதங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பான முதல்கட்ட தகவல்கள் மற்றும் மாநில அரசு நிர்வாக அமைப்புகள் தரும்

தகவல்களையும் சேகரித்து உரிய பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களுடனும் இதுகுறித்து ஆலோசித்து கருத்துகளை கேட்டு பெற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தகவல்களை சேகரிப்பதற்கான வினா படிவம் தயார் நிலையில் இருப்பதாக உயர்மட்டக்குழுவினர் தெரிவித்தனர்

இப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இருந்து பெற இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

உயர்மட்டக்குழுவின் செயல்திட்டத்தை பாராட்டிய திரு அமித் ஷா, இக்குழுவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருமாறு உள்துறை செயலருக்கு உத்தரவிட்டார்.

<<<<<<>>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நான்கு நாள் பயணமாக இன்று பிரான்ஸ் புறப்பட்டார்.

இதுதொடர்பாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான

பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளில் அவர் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துதல், முதலீடுகளை ஊக்குவித்தல், தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகிய முக்கிய விஷயங்கள் குறித்து, பிரான்ஸ் நாட்டு தலைவர்களுடன் திருமதி. நிர்மலா சீதாராமன் பேச்சு நடத்தவுள்ளார்.

அந்நாட்டின் நிதியமைச்சர் திரு. **Roland Lescure**-வுடன் அவர் முக்கிய பேச்சுகள் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பு பொருளாதார மற்றும் நிதி பேச்சுவார்த்தைகளில், பல்வேறு துறைகளில் முக்கிய முடிவுகளை எடுப்பது குறித்து ஆய்வு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக நேரடி பேச்சுவார்த்தைகளையும் திருமதி. நிர்மலா சீதாராமன் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியாவின் வலுவான பொருளாதார கட்டமைப்பு, பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்தும் அமைச்சர் எடுத்துரைக்கவுள்ளார்.

<<<<<<>>>>>>

மலேசியாவின் இந்திய தூதராக திரு **Somnath Ghosh**-ஐ மத்திய அரசு நியமித்துள்ளது.

**1997**-ஆம் ஆண்டு இந்திய வெளியுறவுப் பணியில் சேர்ந்த திரு **Ghosh**, சிக்காக்கோவில் துணைத் தூதராக பணியாற்றி வருகிறார்.

திரு **Somnath Ghosh** விரைவில தமது புதிய பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

பாகிஸ்தானில் உள்ள **ISIS** தீவிரவாத அமைப்பு தொடர்புடைய குழுக்களின் மீது தாங்கள் வான்வழி தாக்குதல் நடத்தியதாக ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தானில் உள்ள **Balochistan, Khyber Pakhtunkhwa** மாகாணங்களில் பதுங்கியிருந்த தீவிரவாத குழுக்கள் மீது நேற்றிரவு இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ISIS** அமைப்புக்கும் அதன் ஆதரவு குழுக்களுக்கும் அதிக அளவில் உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலின் போது, பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருசில தினங்களுக்கு முன்பு, ஆப்கானிஸ்தானில் உள்ள மூன்று மாகாணங்களில் பாகிஸ்தான் படையினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் பெண்கள் குழந்தைகள் உட்பட 36 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தனர். 163 பேர் காயமடைந்தனர்.

இதற்குப் பதில் தாக்குதலாக, ஆப்கானிஸ்தான் நேற்றிரவு ISIS ஆதரவு குழுக்கள் மீது தாக்குதலை நடத்தியதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் முறைகேடான நடவடிக்கைகளை ஐ.நா அமைப்பும், சர்வதேச சமுதாயமும் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்றும் ஆப்கானிஸ்தான் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

இதனையடுத்து, ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ், உடனடியாக பிணைக் கைதிகளை விடுவித்து, அமைதியை நிலைநாட்ட முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், காபூலில் உள்ள பாகிஸ்தான் தூதரை அழைத்து, அந்நாடு நடத்திய தாக்குதலுக்கு, ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

இந்தியாவும், பாகிஸ்தானும் தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள சிவில் கைதிகள் மற்றும் மீனவர்கள் குறித்த பட்டியலை தூதரகங்கள் வாயிலாக பகிர்ந்துகொண்டுள்ளன.

கடந்த 2008-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தூதரக உடன்படிக்கையின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் தேதி மற்றும் ஜூலை முதல் தேதி இந்த பட்டியலை இருநாடுகளும் பகிர்ந்து வருகின்றன.

இதுதொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், பாகிஸ்தானைச் சேர்ந்த 386 சிவில் கைதிகளும், 53 மீனவர்களும் தங்கள் வசமிருப்பதாக தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் வெளியிட்டுள்ள பட்டியலில், 52 இந்திய சிவில் கைதிகளும், 198 மீனவர்களும் தங்கள் வசம் உள்ளதாக தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் சிறைகளில் உள்ள இந்தியர்களையும், மீனவர்களையும், படகுகளையும் காணாமல்போன இந்திய பாதுகாப்பு வீரர்களையும் விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

<<<<<<>>>>>

திரிபுராவில் போக்குவரத்து கட்டமைப்பு மேம்பாட்டிற்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக திரிபுரா முதலமைச்சர் டாக்டர் **Manik Saha** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மத்திய சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரியை சந்தித்து பேசியபோது அவர் இதை தெரிவித்தார்.

திரிபுராவில் மேற்கொள்ளப்பட்டுவரும் நெடுஞ்சாலைத் திட்டப்பணிகள் குறித்து மத்திய அமைச்சரிடம் அவர் ஆலோசனை நடத்தினார்.

திட்டப்பணிகளை விரைந்து மேற்கொள்ள உதவிடுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

அமர்நாத் யாத்திரை செல்லும் முதல் குழுவினர் இன்று ஜம்முவில் உள்ள பக்வதிநகர் முகாமுக்கு வந்து சேர்ந்தனர்.

அமர்நாத் யாத்திரைக்கான அனைத்து அடிப்படை வசதிகளும், பாதுகாப்பும், யாத்ரிகர்கள் தங்குவதற்கான வசதியும் செய்து தரப்பட்டுள்ளதாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

57 நாள் அமர்நாத் யாத்திரை நாளை மறுநாள் பஹல்காம் மற்றும் Baltal வழியாக மிகுந்த பாதுகாப்புடன் தொடங்க உள்ளது.

<<<<<<>>>>>

இந்தியா — இங்கிலாந்து இடையேயான முதலாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று Chester Le Street-ல் நடைபெறுகிறது.

இப்போட்டி இன்றிரவு 10 மணிக்கு தொடங்குகிறது.

------------

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Divyanshi Bhowmick — Abhinandh Pradhivadhi இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------

டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் Ishan Kishan முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

--------------

18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் வாலிபால் சாம்பியன் போட்டி தாய்லாந்தில் இன்று தொடங்கியது.

--------------

இந்தியா-ஏ : இங்கிலாந்து-ஏ அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று **Taunton-** ல் நடைபெறுகிறது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இந்தியா முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது.

--------------

மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் தன்வி கண்ணா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

------------

**19** மற்றும் **23** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

----------

**20** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Neeraj Patel** வெண்கலப்பதக்கம் வென்றார்.

----------------

உலக பாரா வில்வித்தை போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>**